Rajadurai Dec. 1950

# ஆத்ம ஜோதி.




"கோகுலக் கண்ணன் போலே கோதம புத்தன்போலே
ஆதுலத் தீர்க்கவந்தாய் அரவிந்தக் கண்ணை தேவே"

பொருளடக்கம்.

| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| 1 | அரவிந்த கீதம் | 33 |
| 2 | ரவீந்திரன் வந்தனம் | 34 |
| 3 | தேவஜீவனம் | 35 |
| 4 | அரவிந்தர் அமிர்தமொழிகள் | [illegible] |
| 5 | வந்தேமாதரம் | 40 |
| 6 | புதுவையில் ஞானயோகி | 41 |
| 7 | காலத்தைவென்ற மகிரிஷி | 42 |
| 8 | திருவாசகச்சிறப்பு | 44 |
| 9 | நவயுகஜோதி | 45 |
| 10 | அருட்கவி | 49 |
| 11 | மதப்பற்றின் அவசியம் | 52 |
| 12 | கம்பர்பாடு | 54 |
| 13 | பகவத்............கிருபையும் | 57 |
| 14 | பகவான்............பேசக்குறிறது | 59 |
| 15 | குருமணிமாலை | 58 |
| 16 | சாரதாபூஜை | 59 |
| 17 | அஞ்சலித்திடுவோம் | 60 |
| 18 | கருமயுகினைச்சக்கலி | 61 |
| 19 | செய்தித்திரட்டு | 64 |




ஆத்ம ஜோதி

(ஓர் ஆத்மீக மாத வெளியீடு)

சந்தா விபரம்:

ஆயுள் சந்தா ரூ. 75.

வருடச்சந்தா ரூ. 3.

தனிப்பிரதி சதம் 30.

"ஆத்ம ஜோதி" நிலையம்,

நாவலப்பிட்டி (சிலோன்)


ஓம்.

# ஆத்ம ஜோதி

"எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே"—சுத்தானந்தர்


சோதி 3 | விக்கிரம ஞூ மார்கழிமீ | சுடர் 2.


## அரவிந்த கீதம்.

அமிர்கல்யாணி] [ஆதி தாளம்

வாழ்க அரவிந்தன் வாழ்க பராசக்தி
வல்லபன் வாழியவே!
வாழ்க மஹாயோகி, வாழ்க மஹாஜோதி
வாழ்க ஜகத் குருவே! (வா)

ஏழுணர் வோங்கிய இன்பச் சிகரத்தில்
ஏறிய சித்தன் அவன்;
சூழிருள் அச்சம் துடைத்திட விஞ்ஞான
சூரியன் போல் எழுந்தான் (வா)

வானர சாட்சியிம் மண்ணுல கத்திலே
வளர்ந்து செழித்திடவே
தேனருவியென மோனத்தி லேநின்று
தெய்வக் கனல் பொழிந்தான் (வா)

மானவ ஜாதியிங்கே அமரநிலை பெற
வாழும் வகை யளித்தான்;
போனது கலியுகம் பூத்தது புதுயுகம்
பூரணன் வாழியவே. (வா)

—சு. பா.

# ரவீந்திரன் வந்தனம்.

அரவிந்த!

ரவீந்திரன் வந்தனம் ஏற்றருள்! நண்பா! நாட்டுநண்பா!(தேசபந்து)நீயேஸ்வதேசஆத்மாவின் அவதாரவாக்கு. தற்பெருமை உனக்கில்லை; பணமில்லை; சுகமில்லை; எவருடைய அற்பக் கொடையுமில்லை; யாருடைய அற்பத்தயவையும் நீ வேண்டவில்லை; நீயாரிடமும் கையேந்தவில்லை. தடையில்லாத பரிபூரணம் பெறவே நீ உள்விழிப்புடன் இருக்கிறாய், அப்பரிபூரணம் பெறவே நரதேவன் இரவு பகலாய் தவத்தில் மூழ்கியிருக்கிறான்; அதையே பாவலன் இடிமுழக்கத்துடன் மஹா கவியாகப் புனைகிறான்; அதற்காகவே மஹாவீரர்களெல்லாம் சங்கடயாத்திரைசெய்யத்துணிகிறார்கள்.

இன்று நாட்டின் இருளைத்துளைத்து துருவதாரகை (வடமீன்) போன்று நின்று நிலவும் கொடிய துன்பக்கனல் விளக்கை கொடூர அன்புடன் ஆண்டவன் உன்வலக்கரத்தில் கொடுத்தான். வெற்றி! உனக்கே வெற்றி

தண்டனை? யாருக்கு? தண்டனைக்குப் பயந்து தனது வஞ்சப் பொய்ம்மதிலைத்தாண்டி வராதவனுக்கே! நானும் அஞ்சாச்சுபேச்சையுடன் அறத்தைப்போற்றி, அநீதியை அநீதியென்றுதபேடிக்கே! ஆண்டவன் அளித்த நித்திய உரிமைஆண்மை; அதை அச்சமும் துராசையும் கொண்டு, வெட்கமின்றிச் சபையின்முன் எவன் மறுக்கிறானோ அந்தப் பதடிக்கே!

வே, கவி! புயல் விம்மும் கடல் முழக்கத்தையும் கண்ணறியாவேகத்துடன் பாறையைத் தகர்த்தெறிந்து வெறிநடம்புரியும் அருவிமுழக்கத்தையும், உறங்கும் மேகத்தைக் கடகடவென்று கர்ஜித்தெழுப்பும் இடிமுழக்கத்தையும் உனது வாக்கால் கேட்கிறேன்- என்னைச் சூழும் இந்த உச்சமான இசை அலைகளுக்கிடையே ஏ அரவிந்த! ரவீந்திரன் வணக்கம் ஏற்றருள்!

(1907-ம் ஆண்டில் அரவிந்தர் கைதுசெய்யப்பட்டபோது வங்கக்கவி ரவீந்திரநாத்தாகூர் இயற்றிய பாடலின் கருத்துச்சுருக்கம்)



# தேவ ஜீவனம்.

(ஆசிரியர்)

பண்டைக்காலமஹரிஷிகளின் மணிவாக்குகளுள் ஒன்றான "தேவஜீவனம் என்னும் பதத்தை இருபதாம் நூற்றாண்டில் உலகெங்கும் பேசப்படவும் எழுதப்படவும் செய்தபெருமை பகவான் அரவிந்தரைச் சேர்ந்ததாகும். அதைப்பற்றி அவர்மூலம் எழுந்த இலக்கியம் வெறும் புஸ்தகப்படிப்பிலிருந்து உதித்ததல்ல, உண்மையில் அவரது தெய்வீகவாழ்க்கையென்னும்கற்பகச்சோலையிலிருந்துமலர்ந்ததாகும். அவர் விளக்கியருளியபூரணயோகத்திற்கு உதாரணபுருஷர் அவரே. ஆகையால் அவர்வாக்கு தெய்வவாக்கு என்பதை எவரும் மறுக்கமுடியாது. இந்தஉண்மையை உலகு நன்குணர இன்னும் பலஆண்டுகள்கழியவேண்டியதேவை இருக்கலாம். ஆனால், அந்தச்சுணக்கத்தினால் உலகின் அபக்குவம் வெளிப்படுமேயன்றி அவரின் மணிவாக்கின் மகிமையும் பெருமையும் குன்றப்போவதில்லை. தேசபந்து சித்தரஞ்சனதாசர், சொன்னதுபோல்அவற்றின்சிறப்புநாட்செல்லச்செல்லஇன்னும்அதிகரிக்கும்.

"தேவர்போலமானிடரும்வாழவேண்டும்; விண்ணுலகஇன்பம்மண்ணுலகிலேயே நிலவவேண்டும்; துன்பம் விரட்டிஓட்டப்படவேண்டும்; மனிதசமுதாயம் அதற்கேற்ற தெய்வீக மாறுதல்அடைந்து பூரணம் பெறவேண்டும்; என்றபெரியகனவைக்கண்ட அரவிந்தரின்வரலாறு ஆரம்பமுதல் அந்தம்வரைக்கும் அற்புதம் பொருந்தியதாகும். அதனை இதுவரையில் ஆராயாமல் வாழ்ந்தவர்கள் தாமும் அவரதுமகாசமாதிக்குப் பின் அவரதுஉடலில் தெய்வசேதனத்தின் ஒளிவீசுவதைப் பத்திரிகைகள்மூலமும் பார்த்தவர்கள்மூலமும் அறிந்துஅவர்வரலாற்றைப் படிக்க ஆவல்கொண்டுள்ளனர். அம்மட்டோ! மனவுணர்வு விஞ்ஞான திவ்விய சேதனத்தை எட்டி அருட்சோதி பொலிய வேண்டும்; அதுபோல் பிராணனும் உடலும் திவ்விய சேதனத்தால் அமரத்தன்மையடையவேண்டும்." என அரவிந்தர்விளக்கிய தத்துவம் அவரது மரணத்தின்பின் நவீனவைத்திய சாஸ்திரம் வியக்கும் முறையில் நடந்துள்ள அற்புதசம்பவத்தால் ஒருசிறிதளவாவது அனுபவரீதிக்கு வந்து விட்டதாகக் கருதவுந் தொடங்கியுள்ளனரெனலாம்.

அரவிந்தர் பூதவுடல் கொண்டுலாவிய எழுபத் தெட்டாண்டுகளை இருகூறாகப்பிரித்தால், முதல்பாகத்தில் அவர் ஆவேசக்கவியாகவும், தேசபக்தனாகவும், தியாகமூர்த்தியாகவும் விளங்குவதையும், இரண்டாவது பாகத்தில் சர்வாத்ம தரிசியாகவும், பாரத சமுதாய நபியாகவும், உலகரட்சகனாகவும், பூரணயோகியாகவும் படிப்படியாக ஏறி அவர் காட்சியளிப்பதையும் காணலாம். புயல்மயமான முதல்பாகத்திற்கும் அமைதிநிறைந்த பிற்பாகத்திற்கு மிடையே, வாழ்க்கையின் திரும்புமுனை [Turning Point] போல் அமைந்திருப்பது அலிப்பூர் சிறைவாசம். ஒருவருடச்சிறைக்கோட்டத்தவம் முடிந்து அவர் வெளிவந்ததும் செய்தபிரசங்கத்தை வாசிப்போருக்கு இந்தஉண்மைவிளங்கும். உத்தரபாராதர்மரக்ஷணிச் சபையின் வருடாந்தவிழாவில் நடந்த இப் பிரசங்கத்தைக்கேட்ட வ. வே. சு. ஐயர் அதற்கு 'பாரததர்மாசாரியரின் தர்யாவேசப்பிரசங்கம்' எனும் மகுடஞ்சூட்டினர். அப்போது அந்த வீரபுருஷன் லண்டனில் புரட்சிக்கனவுகண்டு கொண்டிருந்தார். தமக்குத்தனிமையில் சிறைச்சாலையில் சொல்லப்பட்டவிஷயங்களையே பாரதசமுதாயத்திற்குந் தாம் சொல்லப்போவதாக அரவிந்தர் ஆரம்பித்த இப்பிரசங்கம், இந்துதர்மவிளக்கந்தந்து சநாதன தர்மமே பாரத சமுதாயத்தின் உயிர்நாடி, அது நசித்தால்நாடும் நலியும் என்றஎச்சரிக்கையுடன் முடிவடைகிறது. பின்னாளில் காந்தியடிகள் அடிக்கடி வரைந்த கட்டுரைகள் சநாதன தர்மங்குறித்த அரவிந்தர் வாக்கிற்கு விரிவுரையாகவே அமைந்துள்ளன. ஆத்மீகவிஷயங்களைப்பற்றி அரவிந்தர் கொண்டிருந்த சிலசந்தேகங்கள், சிறைச்சாலையில் அவர் பெற்ற நாராயணதரிசனம், விஸ்வரூபக்காட்சி, கீதோபதேசம் ஆகியவையெல்லாம் மேலே குறிப்பிட்ட பிரசங்கத்தில் அடங்கியுள்ளன. அவரதுபிற்கால யோகவாழ்வையும் பூரணசரணாகதியையும் நமக்கு விளக்குவதற்கு அது ஓர் முன்னறிக்கையாகவும் பொருந்தியுள்ளது.

அரவிந்தர்விளக்கும் தெய்வீகவாழ்க்கைக்கு முதலில் வேண்டப்படுவது தெய்வநம்பிக்கையாகும். சடமே உண்மையென்னும் உலகாயத்தைஅவர்கண்டிக்கிறார். ஆனால் உலகம் உண்மை; நூலாதாரம் உண்மையென்று வலியுறுத்தும் பௌதிக ரசாயன சாஸ்திரஆராய்ச்சியை அவர்கண்டிக்கவில்லை. ஏனெனில், இந்தஆராய்ச்சியெல்லாம் ஒருமையையே தேடுகின்றனஎன்பதும், ஆராய்ச்சியாளர் அறிவு விசாலம்பெற்று இறுதியில், இயற்கையுடலில் வதியும் மெய்ப்பொருளை அறியும் நாள்வரவேசெய்யும் என்பதும் அவரது நம்பிக்கை. அனைத்திற்கும் தாயகமான அத்தெய்வப்பொருளைத் தொட்டாலன்றி எந்த அறிவோ, ஆராய்ச்சியோ நிறைவாகாது என்பது அவரின் அபிப்பிராயம்.

ஒன்றாகவிருந்து தனது சக்தியால் பலவாக எங்கும் எல்லாமாய் விரிந்துள்ள உள்ள பொருளைமறக்காதே என்பதற்கு அடுத்தபடியாக அவர் தரும் எச்சரிக்கை உலகை வெறுக்காதே என்பதாம். சத்யயுகம், அமரவாழ்வு விண்ணரசு என்பனவெல்லாம் உலகத்தை ஒப்பா நிலையில் வெறுஞ் சொற்களேயாகுமன்றோ? ஆகையால் அவர் வறட்டுத்துறவையும் தனிமோட்சவாஞ்சையையும் அறவே கண்டிக்கிறார். உடல் இன்பமே உண்மையென்னும் சாருவாகருக்கும் உலகம்மாயை, பொய் சித்தே உண்மையென்னும் துறவிக்கும் அவரவர் மனோநிலையே காரணமென்கிறார். மனத்திற்கப்பாலுள்ள விசுவசேதனம் பெற்றால், ஒன்றே பலவாக இருக்கும் உண்மையும், சித்தும் சடமும், சத்தும் அசத்தும் ஒன்றேயென்பதும் தெளிவாகுமென மிகவும் அருமையாக சொந்த அநுபூதிகொண்டு காட்டி,

"பிரம்மம் ஒன்றே; எல்லாம் அதுவே; அதுஸதஸத் விலாஸமானது. அது நிச்சலமோனத்தில் சுத்த சித்ரூபமாக விளங்குகிறது. அதே பிரம்மமே சகுணமாக, கிரியாசக்தியுடன் விளங்குகிறது, மோனத்திலிருந்தே சிருஷ்டி வாசகம் உண்டாகிறது; நிச்சல சாந்தமே கலங்காவுறுதியால் கருமத்தைத் தாங்கி அதற்குத் திறமையளிக்கிறது. உள்ளே பரம சாந்த நிலைபெற்றவர்கள் அபாரமான கிரியா சக்திபெறுவார்கள். உபசாந்த மோனமடைந்த போகி உலகைத் துறக்கவேண்டியதில்லை; வினையை ஒதுக்கவேண்டியதில்லை. ஞானமும் தர்பமும், சாந்தமும் செயலும். மோனமும் முயற்சியும், ஒன்றுக்கொன்று விரோதமானவையன்று. அமைதியான பூமியின் மோனத்தில் வேரூன்றி மரம் தழைத்தோங்குகிறது; அமைதியான உள்ளத்தில் ஊன்றி உலக வாழ்வும் அப்படியே தழைத்தோங்கவேண்டும். உலக வாழ்வும் பிரம்மமே; பிரம்மம் தன்னை உண்மைக்கு உண்மை விசாலிக்கிறது; அதனிடம் மித்யாபாவனை கிடையாது, வேருக்குக் கிளை

விலக்காகாது. சுத்தப் பிரம்மத்திற்கு உலகம் நிஷேதமில்லை; ஏனெனில் அசர்வ உலகமயிருப்பது; ஸதஸத்தும், நிர்க்குண—சகுணமும், நிஷ்கிரிய—கிரியையும், ஆகாசமும்—காற்றும், கடலும்—அலையும் போல ஒன்றுக்கொன்று அனுசாரணையானவை. இவற்றைப் பிரித்து வெறுப்பது இருமன விகாரமேயாம். மனவிகாரங்களைத் தாண்டி விஞ்ஞான நிலையிலிருந்து பார்த்தால், சத்து, அசத்து, ஆத்மா, உலகம், எல்லாம் ஒருமயமாகக் காணும்; பிரம்மமும், சக்தியும், உலகமும் சத்தியமென்பது புலனாகும். மாயாவாதத்திற்கே இடமிராது. உலகம் பொய் என்பதே பொய். உலகமெல்லாம் பிரம்மமயம். சுத்தப்பிரம்மமும் விசுவப்பிரம்மமும் பொன்னும் நகையும் போலாகும். பொன் உண்மையானால் நகை பொய்யாகுமா? உண்மையான அத்வைதம் சர்வம் பிரம்மமயம் என்பதை விளக்கும்; அது 'பிரம்மம் வேறு உலகம் வேறு; உள்ளது பிரம்மமே; உலகம் இல்லது' என்று பிரிக்காது." என்று கூறியுள்ளார். அவர் அருளிய 'தேவ ஜீவனம்' என்னும் நூலின் முன்னுரையின் சாரம் இதுவாகும். அவரது காரியம் அத்யாத்ம காரியம், அதில் ஆக்கிரகத்திற்கும், அவசரத்திற்கும் அணுவேனும் இடமேயில்லை. தொன்றுதொட்டு சித்தர்கணம் வாழ்ந்த தென்னாட்டிற்கு வந்திராதிருப்பின், அவரது சித்தாந்தம் சித்தியடைந்திராதெனத் தயங்காமற் கூறலாம். திருமூலர் பாடல்களையும், மாணிக்கவாசகரின் திருவண்டப்பகுதியையும் படித்து அவற்றின் கருத்தைத் தெளிந்தவர்கட்கு அரவிந்தர் நூல்களில் அடங்கிய தத்துவங்களை விளங்குதல் கஷ்டமாயிராது. ஆனால் அவற்றின் லட்சியத்தை அடைவதற்கு நீண்டகால சாதனையும் தெய்வத் திருவருளும் தேவையாகும். 'தேவ ஜீவனம்' என்று சொல்வதனால் மட்டும் மனிதன் தன் குற்றங்குறைகளிலிருந்து விடுபட்டு தெய்வாம்சம் பெற்றுவிட முடியாது.

"கரைகடந்து களித்ததென் உள்ளமே
கட்டுடைந்ததென் காவிய வெள்ளமே
உரை கடந்ததென் அன்பின் உருக்கமே;
உலகை ஆண்டிடும் மோனப் பெருக்கமே
வரைகடந்த மகிமையைக் கண்டனன்.
வாழ்வை யோகம தாக்கி மகிழ்ந்தனன்
திரை கடந்தெழு தேவர் அமுதெனத்
தித்தித் தாவி சிலிர்த்தது நாதனே. —சுத்தானந்தர்



# அரவிந்தர் அமிர்தமொழிகள்.

உலகம் பொய்யென்னும்மாயாவாதமும், கடவுள்பொய்யென்னும் நாத்திகவாதம்போலப்பொருளற்றதாகும். உயிர்வாழ்வாகப்பொலிவது கடவுளே; அக்கடவுளைக்கண்டு கலப்பதே உயிரின் கருத்து.

* * *

ஞானதீரர்கள் ஒதுங்கி நின்றால், உலகம் அஞ்ஞானக்காடாகும். ஆத்மசித்திபெற்றவர்கள் உலகவாழ்வைப் பொலிவுறப்போற்றவேண்டும்.

* * *

இல்லாதஉலகை, இல்லாத மனத்தில் மயக்கி, இல்லாதகொள்கையுடன் துரவு துறப்பதாகச்சொல்வதும் விநோதமே! துறந்தோடிப் போனாலும் மாயம் நம்மை விடாது பற்றிக்கொண்டு, "பேதையே! எனது இரகசியம் உனக்கென்னதெரியும்?" என்று சிரிக்கிறது.!

* * *

உயிர் உடலில்கட்டுப்பட்ட அளவற்ற சக்தி. அதன்செயல்கள் குறைவும், தளர்வும், தடுமாற்றமும் ஆனவை; எனினும் அதன் அந்தரங்கத்தில் அனந்தசக்தியுணர்வு மறைந்திருக்கிறது. அந்தச்சக்தியின்றி அணுவும் அசையாது.

* * *

மனிதன் யோகயுக்தியால் தன்னைப் பிறருக்குத்தந்து, பிறர் உதவியையும் ஏற்பது முன்னேற்றத்திற்குமுதற்படியாகும். மனிதன் தன்னைக்கடவுளுக்கு தருவதே அடுத்தபடி. தம்மைக்கொடுத்தவருக்கு இறைவன் தன்னையே கொடுப்பான்.

* * *

எங்கும் அறியாமையும் துயரமும் துன்பமும் மலிந்துள்ள இவ்வுலக வாழ்க்கையில் அதிருப்திகொண்டமக்கள், இந்நிலையினின்று வெளியேறவகையறியாது பெரிதும் அல்லற்படுவதை நாம்கண்கூடாகக்காண்கிறோம்.

* * *

உள்ளது ஒன்றே அது அதிஅந்தமற்றது; யாதொரு சார்புமற்றுத் தான்தானாக விளங்கும் உண்மை-அறிவு-ஆனந்தம் (சச்சிதானந்தம்) அதன் இயல்பு. அதுவே பரம்பொருள் அதை நாம் முழுமுதற்கடவுள் என்கிறோம். ஒருவனேயாகிய அம்முழுமுதற்கடவுள் பலவாக-இவ்வுலகுயிர்க்காக தன்னைவெளிப்படுத்திக்கொண்டு அவற்றுள் ஊடுருவிப்பரவி அவற்றைஇயக்குகிறான்.

# வந்தே மாதரம்.

1 நளிர்மணி நீரும், நயம்படு கனிகளும்
குளிர்பூந் தென்றலும், கொழும்பொழிற் பசுமையும்
வாய்ந்து நன்கிலகுவை, வாழிய அன்னை! (வந்தே)

2 தெண்ணில வதனிற் சிலிர்த்திடு மிரவும்
தண்ணியல் விரிமலர் தாங்கிய தருக்களும்
புன்னகை யொளியும், தேமொழிப் பொலிவும்
வாய்ந்தனை, இன்பமும் வரங்களு நல்குவை. (வந்தே)

3 கோடி கோடி குரல்க ளொலிக்கவும்
கோடி கோடி புயத்துணை கொற்றமார்
நீடு பல்படை தாங்கி முன்னிற்கவும்,
கூடு திண்மை குறைந்தனை யென்பதென்
ஆற்றலின் மிகுந்தனை, அரும்பதங் கூட்டுவை,
மாற்றலர் கொணர்ந்த வன்படை யோட்டுவை. (வந்தே)

4 அறிவுநீ, தருமநீ, உள்ளநீ, அதனிடை
மருமநீ, உடற்கண் வாழ்ந்திடு முயிர்நீ.
தோளிடை வன்புநீ, நெஞ்சகத் தன்புநீ,
ஆலயந் தோறும் அணிபெற விளங்கும்
தெய்வச் சிலையெலாம், தேவி, இங்குனதே. (வந்தே)

5 பத்துப் படைகொளும் பார்வதி தேவியும்
கமலத் திதழ்களிற் களித்திடும் கமலையும்
அறிவினை யருளும் வாணியும் அன்னைநீ! (வந்தே)

6 திரு நிறைந்தனை, தன்னிக ரொன்றிலை!
தீது தீர்ந்தனை, நீர்வளஞ் சார்ந்தனை,
மருவு செய்களின் நற்பயன் மல்குவை,
வளனின் வந்ததோர் பைந்நிறம் வாய்ந்தனை
பெருகு மின்ப முடையை, குறுநகை
பெற்றொளிர்ந்தனை, பல்பணி பூண்டனை
இரு நிலத்துவந் தெம்முயிர் தாங்குவை,
எங்கள் தாய், நின்பதங்க ளிறைஞ்சுவாம்! (வந்தே)



# புதுவையில் பூரண யோகி.

கலைசிறந் தோங்குகின்ற கல்கத்தா நகரில் வந்தே
அலைமுர சடிக்கும் இங்கி லாந்தினில் அமரக் கற்றே
தலைபெறும் புலவனாகித் தனிப்பெருங் கவிஞனாகி
விலையிலா நூல்களீந்த வியன்பெறும் அறிஞன் இன்னோன்

வெள்ளையர் கலையைத் தேர்ந்து வேதமெய்க் கலையுந் தேர்ந்து
பள்ளி யாசிரிய ராகிப் பரோடாவில் இருந்த காலை,
தெள்ளிய ஞானந் தேறத் திருவுறு யோகஞ் செய்ய
உள்ளுற உவகை கொண்டே ஒளிபெற முயன்றனம்மா!

செஞ்சொலும் பொருளும் வேதச் சித்திரப் பொலிவுங் கொண்டு
நெஞ்சினை யள்ளுகின்ற நிகரில்லாக் கவிதை செய்தோன்
அஞ்சறு சிங்கம் போலே ஆரிய நாடுபட்ட
வெஞ்சிறைப் பூட்டுடைக்க வீறுகொண்டெழுந்தான் மன்னோ!

செல்வமார் தொழிலை விட்டுத் தேசமுன் னேற்றத்திற்கே
கல்வியை நல்கிப்பின்பு கனல்பெறும் எழுதுகோலால்
வல்பெறுந் தியாகி, வந்தே மாதரம், கர்மயோகி
தொல்பெருந் தருமம் என்னும் சுதந்திரப் பேரியார்த்தான்.

கண்ணனின் கீதை காட்டும் கருமயோகத்தைக் காத்தே
புண்ணியப் புலவன் அல்லி புரச்சிறை காத்த போதே
எண்ணிய யோக சித்தி யெய்தினன்; சிறையைக் கண்டான்
விண்ணுறத் தருமபேரி முழக்கிட வெளியே வந்தான்,

உத்தம நாட்டின் சேவை யோகமாய்ப் புரிகவென்றே
நித்திய வழியைக்காட்டி நிகரிலா வள்ளலாரின்
புந்தலர் அருட்பா ஓங்கும் தமிழகப் புதுவை வந்தான்
சித்தனெம் பெருமான் இங்கே புதுயுகந்திகழ வைத்தான்.

துயர்மிகும் கலியை மாற்றித் திருதயுகந் தோற்ற வேண்டி
அயர்வுறுஞ் சடத்தினுக்கும் அமுதத்தை ஊற்றுகின்ற
உயர்பெறும் விஞ்ஞானத்தின் உச்சியில் இருவராக
இயல்புற வாழுகின்ற வாழ்வினை இறைஞ்சுவாமே.

(பாரதசக்தியில் சாதனகாண்டம் புதுயோகிப் படலம்)

# காலத்தை வென்ற மகரிஷி.

(சுத்தானந்தர்)

சென்ற சிலகாலமாக நான் மகா துரியசமாதியில் ஆழ்ந்திருக்கிறேன். நேற்றுக்காலை கதவுச்சத்தம்கேட்டது திறந்தேன் ஸ்ரீ அரவிந்தர் காலஞ்சென்றார் எனக்கேட்டேன். நாங்கள் மாலையுடன் விரைந்தோம். ஆசிரமம் சோக மௌனத்தில் கடவுளில்லாக் கோயில்போல் இருந்தது. ஸ்ரீ அரவிந்தயோகி, வெறுங்கட்டிலில் நீண்டுகிடந்தார். முகத்தில் உயிர்க்களை ததும்பியது. சிறிதும் பிணக்களையில்லை. அவர் தமது காரியம் நிறைவேறியது என்ற திருப்தியுடனேதான் உடலை நீத்திருக்கிறார். ஒரு நிமிஷம்; அந்த ஒரு மௌன நிமிஷத்தில் இருபத்துமூன்றாண்டுகளின் நினைப்புச்சுருள் மின்சாரவேகத்தில் ஓடியது. அவர்ஆவி என்னுள் படபடத்தது. எனது மாலையை அவர்பக்கத்தில் வைத்துப் பணிந்தேன். என்னுள் மூன்றுவெண்பாக்கள் எழுந்தன.

ஆரும் காணா அரவிந்தா—நின் உடலைப்
பாராரும் காணப் பறந்தாயோ—சீராரும்
யோகத்தால் போகம் உவந்தாய், அரவிந்தா
ஏகத்தால் என்னுள் இரு.

எண்ணி எழுதி இயற்றுமுன் பொற்கனவால்
மண்ணுலகம் பொன்னாக மாறுமுன்னே—விண்ணரசு
விண்ணிலே என்று விரைந்தாய் அரவிந்தா,
புண்ணிய என் நெஞ்சிற்புகு.

நித்தியமே தேகமென நீளப் பறையடித்த
சித்தர்களும் ஊனுதறிச் சென்றுவிட்டார்—இத்தலத்தில்
எந்தை இறையருளே எண்ணி எனதுயிரே
வந்தவினை செய்து மகிழ்.

இந்தச்சம்பவம் என் ஆத்மசோதனையிலும் புதிய உணர்ச்சியை ஊக்கியது. 1908 முதல் நான் ஸ்ரீ. அரவிந்தரை அறிவேன். அவரது வந்தேமாதரமே எனது தேசபக்தியைத் தூண்டியது. அவரது கர்மயோகமே எனக்குக் கர்மவீரந்தந்தது. அவரது ஆரியா



எனக்கு வேத விளக்கைக்காட்டியது. நான் முயன்ற ஸஹஸ்ரார சித்தி அவர் திருவடியில் நிறைவேறியது. எனது காவியமலர்களெல்லாம் அவர் அருள் மெருகைப்பெற்றன. பாரதசக்தி மகாகாவியத்தை நான் மொழிபெயர்த்து அனுப்பஅனுப்ப அவர் மெச்சி ஆசி கூறினார். எனது வாழ்க்கையாகிய அக்காவியம் அவரது மகா சக்தியால் வெளிவந்து உலாவுகிறது. பலமொழிகளில் நூற்றுக்கணக்கான காவியங்களை அவர் திருவடி நிழலில் இருந்து மௌனத்தனிமையில் பாடினேன். ஸ்ரீ அரவிந்தரின் நூல்களைப் பலமுறை ஆராய்ந்து பத்தாண்டுகள் செலவிட்டுப்பல யோகநூல்களை எழுதினேன். இவற்றிற்கெல்லாம் வேண்டிய மௌன அமைதியை அவர் அளித்தார். ஆதலால் என்வாழ்க்கை என்றும் அவர் சித்தத்துடன் ஐக்கியமானது. ஸ்ரீ அரவிந்தர் காலம் சென்றார் என்பது பிசகு. அவர் காலத்தை வென்றார்.

இந்தியா உள்ளமட்டும், வேதஞானம் உள்ள மட்டும் ஸ்ரீ அரவிந்தர் வாழ்வார். ஏனெனில், அவர் மூச்செல்லாம் எழுத்தெல்லாம் இந்தியாவுக்கும் பாரதமாதாவின் வேதக்கலைக்குமே நிவேதனமாயின. அவர் வரலாற்றை தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு பாஷைகளிலெழுதியிருக்கின்றேன். எனது நன்றிக்கு அறிகுறியாக அவர் பெருமையை பாரதசக்தி புதுயோகிப் படலமாகச் சித்திரித்திருக்கிறேன்.

ஸ்ரீ அரவிந்தர் புதுயுகச் சுடர். அவர் குறிவைத்த இடமெல்லாம் அழகு உருக்கொள்ளும். கண் வைத்த இடமெல்லாம் கவலை நீங்கிக் களி பொங்குது நமது யுகத்தின் சிறந்த ஆத்மச்சிற்பி அரவிந்தர். திருவண்ணாமலை விருபாட்சி குகையில் சமாதிசித்திபெற்ற எனக்கு அவர் வாழும் வகையைக் காட்டினார் கீதையின் ரகசியத்தை விளக்கினார். யோகக்கலையின் உலகப்பயனை உபதேசித்தார். ஸ்ரீ அரவிந்தர் கவிதையிலும் வசனத்திலும் தமது பொற்கனவுகளைத் தீட்டியிருக்கிறார். உலக வாழ்வு துன்பம் இல்லை. இயற்கையில் எல்லாம் இன்பமே. துன்பம் மனவிகாரமே. மனங்கடந்த விஞ்ஞான நிலைபெற்றால் இந்த உலகில் மாந்தர் இன்புறச் சேர்ந்து வாழலாம். "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்ற அப்பர் வாக்கை மெய்ப்பிக்கலாம். "உடம்பினில் உத்தமனைக்காண்" என்ற ஔவைவாக்கை

# திருவாசகச்சிறப்பு.

(யோகி சித்தியானந்தர்)

"தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே — எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்."

எல்லைமருவா நெறியளிக்கும் — தன்னை மனமொழிமெய்யினால் மெய்யன்போடும் வழிபடுகின்ற மெய்யடியவர்களுக்கு, இவ்வளவு தானென்று வரையறுத்துச் சொல்ல முடியாத மோட்சசாதனவழியை எளிதிற் பெறும்படி கொடுக்கும்,

வாதவூரெங்கோன் திருவாசகமென்னுந்தேன் — திருவாதவூரின்கண்ணே யுண்மையாகிய சிவயோக நெறியையுலகுசண்டறியும்வண்ணந்தந்தருளவும், அரிமர்த்தன பாண்டியனது செங்கோலுயரவும் திருவவதாரஞ்செய்தவராகிய எங்கள் ஆதிசைவசமயாசாரியராகிய திருவாதவூரடிகள் என்னும் பிள்ளைத்திருநாமம் பெற்றவராகிய மாணிக்கவாசகசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருவாசகமென்னுந்தேனானது.

தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளைநீக்கி — அனாதியாகவே ஆன்மாக்களைப்பற்றியிருப்பதாகிய, விட்டுநீங்குதற்கரிதாகிய, பிறவிப்பெரும்பிணியாகிய விலங்கெனப்பற்றி நிற்கின்ற மும்மல வீக்கங்களைத்தன் திருக்கருணையினால் நீக்கி,

அல்லலறுத்தானந்த மாக்கியதே — அப்பிறவிகள் தோறும் எய்தும் துன்பத்தினின்றும் விலக்கி நிரதிசயமான ஆனந்தத்தை உண்டாக்கியது.

---

முற்பக்கத்தொடர்ச்சி

விளக்கலாம். "தவத்தால் கூற்றையும் தாண்டலாம்" என்ற திருமூலர் வாக்கை நடத்திக் காட்டலாம். வாழ்க்கை முற்றிலும் ஆழ்வார்களும் கீதாசாரியரும் சொல்லுகிறபடியே ஆண்டவனுக்குச் சரணாகவேண்டும். வாழ்க்கை ஆத்மசேதனத்தின் அழகுமலராகவேண்டும். வாழ்க்கை முழுதுமே யோகக் கலையாக வேண்டும் என்பது ஸ்ரீ அரவிந்தரின் பொற்கனவு இதை நிறைவேற்றவே அவர் ஒரு மகாசங்கத்தை நடத்தினார். அது தான் ஸ்ரீ அரவிந்த ஆசிரமம். ஸ்ரீ அன்னையின் குப்தசக்தியால் வசீகரிக்கப்பட்டுப் பொன்னும் பொருளும் அங்கே குவிந்தன, ஆனால் ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமத்தைவிட உயர்ந்தவர்- பெரியவர். உலகைவிட மேலானவர். அவர் உள்ளம் என்னுள் துடிக்கிறது. அவரை அறிந்த பலருள் சுழல்கிறது அவர் காலம்சென்றாரா....இல்லை....காலத்தை வென்றார். அரவிந்தர்வாழ்க! அவர் நாட்டிய யோககலை வாழ்க!



# நவயுக ஜோதி.

(சுத்தானந்த பாரதியார்)

உலகில் எத்தனையோ ஊர்களுண்டு. புதுச்சேரிக்கு அடித்த யோகம் வேறு எந்த ஊருக்கும் இல்லை. ஏனென்றால் இங்கே யோகமே உருவெடுத்திருக்கிறது. அந்த யோக ஜோதியைக் காண எட்டுத் திசைகளிலிருந்தும் உத்தமர் யாத்திரை வருகிறார்கள். புதுச்சேரி புதுயுகச்சேரியாகி வருகிறது. இங்கே விளங்கும் யோகராஜ்யம் உலகைக் காந்தம்போல் இழுத்துக்கொண்டிருக்கிறது. அதுவே ஒரு புது உலகாக வளர்கிறது.

உலகில் உள்ள மேதாவிகள் அனைவரும் 'அசுரயுத்தம் ஒழியவேண்டும்; அமைதியாக வாழவேண்டும்; காட்டுமிராண்டித்தனம் பகற்கொள்ளை ஒழியவேண்டும்' என்று ஜபம் செய்கிறார்கள். எல்லாரும் புதுயுகம் புதுவாழ்வு புதிய ஜாதியை எதிர்பார்க்கிறார்கள். அவை இருக்கிற இடம் மட்டும் இன்னும் பலருக்குத் தெரியாது. புதுயுகமும் பழயவாழ்வுங்கொண்ட புதிய மனித ஜாதியும் புதுச்சேரியில் வளர்ந்து வருகின்றன. புதுச்சேரியைப் புதுயுகச்சேரியாக்கிய ஜோதியே ஸ்ரீ அரவிந்தர்.

1872-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கடலூருக்கு வந்திருந்த இராமலிங்கசுவாமிகள் ஒரு பெரிய திருவாக்கருளினார். 'நான் ஆன்மநேய ஒருமை, சுத்தசன்மார்க்கம். சாதிமத சாத்திர கோத்திரமாகிய புன்குட்டைகளில்லாத புதிய சமரஸ வாழ்க்கை, அருட்சோதிவிளக்கம் ஆகியவற்றைப்பற்றிப் பேசினேன், பாடினேன்; யாரும் கேட்கவில்லை. என் கடையை மூடிவிட்டேன். ஆனால் என் உள்ளம் அழியாது. நான் கண்ட ஆன்மநேயக்கனவை வடக்கிருந்தும் மேற்கிருந்தும் வரும் உத்தமர் நிறைவேற்றுவர்.

அதே சமயந்தான் ஸ்ரீ அரவிந்தரும் பிறந்தார். வங்காளத்திற் பிறந்து, அரசியல் வீரராகக் கர்மயோகம்செய்தவர். 1910-ம் ஆண்டு புதுச்சேரிக்குவந்து விஞ்ஞான பூர்ணயோகி ஆனதும் அவருக்கு யோகசக்தியாக ஸ்ரீஅன்னை பிரான்சிலிருந்து அடுத்த ஆண்டே வந்ததும் நினைத்தால் நம் உள்ளம்சிலிர்க்கிறது. மகான்கள் கண்ட உண்மை வீணாகாது.

"தனித்தலைமைப்பெரும்பதியென் தந்தைவருகின்ற
கருணைமிகு சத்தியங்காண் சகத்தீர் கேண்மின்
இனித்தநறுங்கனிப்பான் றேனென்றுளந்தித்திக்க
இன்னமுதம் அருத்தியெனை எழுநிலைக்கும்போற்ற
மனித்தவுடம்பிதை அழியாவாய்மை யுடம்பாக்கி
மன்னியசித்தெல்லாம் செய்வல்லபம்கொடுத்தே
தனித்தசிவானந்தமெனும்பெரும்போகந்தனிலே
களித்திடவைத்திடுகின்றகாலையுமிங்கிதுவே"

என்று அருட்தோதிக்குயில் அன்று கூவியது.

பரத்தை இகத்தில் விளக்கல் இதுதான் ஸ்ரீ அரவிந்தரின் உள்ளம். இந்தக்கருத்து எத்தனையோ தீர்க்கதரிசிகளின் வாக்கில் புறப்பட்டதுண்டு. ஏசுநாதர் வானரசை மண்ணுலகில் சொணரச் சிலுவையாகிய தியாகவழியைக் காட்டினார். வானரசில் நுழையவேண்டுமானால் சூது வாது செருக்கெல்லாம் விட்டுக் குழந்தைபோல் மாறிப்பிறக்கவேண்டுமென்றார். அப்படி மாறிப் பிறந்தவர் பரம பிதாப்போல் தெய்வ பரிபூரணம் பெறலாம் என்றார். மாணிக்கவாசகர் மாறிப்பிறக்கும் மருந்தைச் சிவனிடம் இறைஞ்சினர். கண்ணன் "இறைவனைச் சரண்புகுந்து, அன்புடன் பணிசெய்; குணதொந்த விகாரமில்லாத இன்பநிலைபெறுவாய்" என்றார். புத்தர் துசிதம் என்கிற சுவர்க்கத்தில் பரம சாந்தம் எய்தலாம் என்றார், முகம்மது நபி அல்லாவின் கட்டளைப்படி பயபக்தியுடன் நடந்தால் சுவர்க்கத்தில் ஆனந்தமாக வாழலாம் என்றார். அவரவர் மனக்கனவிற்குத்தக்கபடி தீர்க்கதரிசிகள் சுவர்க்கத்தை கற்பனைசெய்து மாந்தர் உள்ளத்தைக் கவர்ந்தனர், மில்தன் சுவர்க்கமும் நரகமும் மனப்பான்மையே என்றார். வள்ளலார் அதே சுவர்க்கத்தை 'இகத்தில்' இந்தஉலகில் விளக்கவேண்டுமென்றார்- ஸ்ரீ அரவிந்தர் "மறுஉலகம் வானுலகம் என்பதேன்." நாம் கண்ணாலே காணும் இந்தஉலகிலேதான் நமக்குவேலை. இதிலேதான்சுவர்க்கலோகத்தைக்கொண்டுவரவேண்டும். வானுலகில் உள்ள தேவர்களை இங்கேயே உண்டாக்கவேண்டும் என்கிறார்.

மனிதன் சுயநலவாழ்வைவிட்டு வீரதீரபரோபகாரங்களுடன் மனிதனாகவாழவேண்டும். அடுத்தபடி மனிதன் தேவனாகலாம். தேவனென்றால் ஏதோ ஆகாயத்திலிருந்துகுதித்தவனன்று. உன்னதமான அருள்பெற்ற மனிதரே தேவர். சைவசித்தாந்தம் மனி



தரை சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்று மூன்று வகையாகச்சொல்லுகிறது. இவருள் விஞ்ஞானகலரே ஆணவம் சிறிதுமட்டுமுள்ள உச்சமனிதரான தேவராவர். விஞ்ஞானகலர்களை உலகில் உண்டாக்க மெய்கண்ட முனிவர் வழிகாட்டியிருக்கிறார்.

ஸ்ரீ அரவிந்தர் தமது சித்தாந்தத்தைப் பக்கம் பக்கமாக எழுதிக் குவித்திருக்கிறார். எல்லாம் வடிகட்டிப் பார்த்தால் ஆறு கொள்கைகள் புலப்படும்.

1 உலகம் உண்மை; அதை நுகர்க.
2 வாழ்க்கை யோகம்.
3 மனிதவாழ்வைத் தெய்வவாழ்வாக்கலாம்.
4 மனிதனை மாற்றுவது விஞ்ஞானசக்தி.
5 அந்தச்சக்தி அன்னை அருளால் வரும்
6 அதற்குச் சாதனம் அன்னைக்கே தன்னையும் தனதையும் தந்து அவள் கைங்கரியத்தையே பக்தி சிரத்தையுடன் செய்வதுதான்.

"விஞ்ஞானமே வேள்விக்கு வெற்றிதரும்; விஞ்ஞானமே வினைவெற்றிதரும்; விஞ்ஞானத்தையேதேவர் பரம்பொருளாகஉபசரிப்பார்கள்; விஞ்ஞானசக்தியே முதன்மை." என்பது வேதவாக்கு. இந்த வாக்கைப் பேனுவால் விளக்கி வாழ்விலும் உருவாக்கிய ஒரே ஒருவர் ஸ்ரீ அரவிந்தரே. பழைய வேதப்பொருளை அவர் கண்ணுக்கு மெய்யாக விளக்குகிறார். விஞ்ஞானசக்தி இறங்கினாலே உலகம் புதுமைபெறும்.

ஸ்ரீ அரவிந்தர் கருத்தை ஒரேவார்த்தையில் சொல்லலாம்—ரூபாந்தரம்—சித்தாந்தபூம் ரூபாந்திரம் அல்லது உருமாற்றத்தை பற்றிப் பேசுகிறது. ஸ்ரீ அரவிந்தர் விஞ்ஞான சக்தியால் உடலும் அமரமாகிச் சாவை வெல்லும் விஞ்ஞானக்கலையை உபதேசிக்கிறார். ஆனால் அதற்குரிய விஞ்ஞானசக்தி இனித்தான் இறங்கிவரவேண்டும்.

விஞ்ஞானக்கலையே ஸ்ரீ அரவிந்ததத்துவமாகும். மனிதன் இன்றிருக்கும் ஆசையாணவநிலைமாறி, போர், போட்டி பொறாமையொழிந்து விஞ்ஞானசக்தியால் ரூபாந்தரமெய்தி அதிமனித

ரான தேவர்களாவதே அவர் திருவுளம். தேவர் என்பதை அவர் மிகப்பொருத்தமாக அதிமனிதர் என்கிறார்.

உலகையெல்லாம் கடவுளின் சிற்சக்தி விளையாடும் கோயிலாகக் காண்க. வாழ்வையெல்லாம் சுயநலப்பேராசையின்றி தெய்வசிற்சக்திக்கே வேள்வியாக்குக. ஒவ்வொருசெயலையும் கடவுளுக்கே வழிபாடாகச்செய்க. இதனால் தெய்வசக்தி இறங்கி, அந்தக்கரணசுத்தியும், ஆத்மப்பிரகாசமுந்தந்து, குறைகளை நீக்கி, மனிதனைத்தெய்வப்பொலிவுறச்செய்யும். இதுதான் ஸ்ரீ அரவிந்தர் பரிபாஷையில் ரூபாந்தரம் புதுப்பிறவி என்பதாகும்.

உலகில் எத்தனையோ மகான்கள் வந்தார்கள் பேசினார்கள், அடியார் கூட்டத்தைத் திரட்டினார்கள். அவர்கள் பின்னால் உலகம் சாதிமதபேதக்காடாக நிலைகெட்டிருக்கிறது. ஸ்ரீ அரவிந்தர் செயல்களெல்லாம் கெட்டி; அழுத்தம். யாராலும் அசைக்கமுடியாமல் நிலையான காரியங்களை அவர் செய்கிறார். விஞ்ஞானசக்தி இறங்கும்; மனிதன்புதுமை பெறுவானென்று ஸ்ரீ அரவிந்தர் உறுதிகூறுகிறார்.

நவயுகம், நவஜாதி, நவஜீவன் வருக என்று தியானிப்போம், புதுயுகஜோதி அமரஜோதியானது அதுஎல்லார் உளத்திலும் புகுந்து புதுமை பெறுவிப்பதாக.

நல்லறிஞ ரோங்க நலமோங்கிப் பூவெங்கும்
எல்லாரும் வாழ்க இனிது.

---

## உண்முகக் குரு.

[க. தி]

தற்பரா சிவனே என்று தம்மினே நினைவார்க் கெல்லாம்
பொற்புணர் வளித்துஞான போதகஞ் செய்யுமூர்த்தி
எற்பலன் கண்டாயிந்த உலகினுக் கிரங்கியென்று
பொற்போதுக் காட்டி நிற்கும் பூரணானந்த வாழ்வே.



# அருட்கவி.

(சுத்தானந்த தாசன்)

அவர்ஒருபுலவர்என்றால்என்னபுத்தகம்இயற்றியிருக்கிறார்? எத்தனைபாடல்கள் வெளிவந்திருக்கின்றன? என்றகேள்விகள் எழும்புகின்றன. அவர் ஒரு அறிவாளி என்றால் எத்தனை பிரசங்கங்கள் செய்திருக்கின்றார்? எத்தனை கட்டுரைகள்பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன என்ற கேள்விகள் எழும்புகின்றன. அவர் ஒரு மகான் என்றால் என்ன அற்புதங்கள் செய்திருக்கிறார்? சிஷ்யர்கள் எத்தனை பேர்? எத்தனைதரம் சாப்பிடுகிறார்? என்ற கேள்விகள் எழும்புகின்றன.

இது உலகக் கண்கொண்டு பார்க்கின்ற படம். அதாவது முகத்துக் கண்கொண்டு பார்க்கின்ற மூடத்தனம். அகத்துக் கண்கொண்டு பார்த்தால் இவ்வேற்றுமையெல்லாம் ஆனந்தமென்ற ஒருமையில்தோன்றும். இவ்வகக்கண் ஆண்டுக்குத் தக்கதாக வெளிப்பதில்லை பட்டங்களுக்குத் தக்கதாக வெளிப்பதில்லை. வாலறிவனது நற்றாள்தொழுதல்தான் கல்வியின் பயன் என்றுணர்ந்த அறிஞர்களின் ஞானத்திற்குத்தக அகக்கண் ஒளியுடையதாகும். எத்தனையோபிறவிதோறும் அணு அணுவாக வளர்ந்து வந்தகண்.

மூன்று வயதுடைய ஞானசம்பந்தக் குழந்தை கண்ட தெய்வீகக் காட்சியைக் குழந்தையின் தந்தையார் காணமுடியவில்லை. யாரடா உனக்குப் பாலூட்டினார் என்று அதட்டிய தந்தைக்குக் குழந்தை பாவில் மறுமொழி தருகிறது. குழந்தையின் ஊன்கண்களுக்குத் தெரிந்த தோற்றம் அகக்கண்ணிலிருந்து கவி உருவத்தோடுவருகிறது.

தோடுடைய செவியன்; விடைஏறி; ஓர்தூவெண்மதிசூடி;
காடுடைய சுடலைப்பொடிபூசி; என்னுள்ளங் கவர்கள்வன்

இதனுண்மையையும் அகக்கண்கொண்டு அறிவாரே அறியலாம் மற்றையோர்க்கு ஏதோ நாலுவரிப்பாட்டென்றே மனதில்படும். மூன்றுவயதுக் குழந்தை பாட்டாவது பாடுவதாவது, இது எல்லாங் கட்டுக்கதை என்பார் ஒரு சாரார். சம்பந்தப் பெருமானைக்

கற்பனை செய்ய அறியாதார, அகக்கண்கொண்டு பார்க்கமாட்டாதார் கவி யோகி சுத்தானந்த பாரதியார் அவர்களை இன்று கண்கொண்டு பார்ப்பார்களாக.

சுத்தானந்தக் குழந்தைக்கு ஐந்து வயது; சிறிய தந்தையார் நீ யாருடைய பிள்ளை என்று கேட்டார். நான் அம்மை மீனாட்சியின் குழந்தை என்கிறது சுத்தானந்தம். என் குழந்தை என்று சொன்னால் இந்த வீடு வாசல் எல்லாம்உனக்கே என்றார் சிறிய தந்தையார். இவையெல்லாம் மீனாட்சிதந்த பிச்சை தானே என்கிறது குழந்தை. சிறியதந்தையார் முகத்தில் சிறிது கோபத்தை வரவழைக்கிறார். அப்படியென்றால் நீ இங்கிருக்காதே மீனாட்சியிடம் ஓடிச்செல் என்கிறார். குழந்தையின் அகக்கண்ணில் மீனாட்சி குடிபுகுந்துவிட்டாள்.

மணி நான்கானது. அம்மை மீனாட்சியைத் தேடிக் குழந்தை மதுரை மீனாட்சியம்மன் சந்நிதியில் புகுந்தது. அம்மையின் முன்னாகக் குழந்தை சென்று நோக்கியது குழந்தையின் முறையீட்டை உணர்ந்த அம்மை குழந்தையை ஏற்றுக்கொண்டாள். குழந்தையின் உணர்வில் ஏதோ ஒன்று பாய்ந்தது; குழந்தை அடியற்றமரம்போல் வீழ்ந்தது. மணித்தியாலக்கணக்காய் நேரம் கழிந்தது. விழுந்தகுழந்தை எழும்பவில்லை. தேகத்தின் உணர்ச்சி வந்தது. எழுந்து நின்றது குழந்தை. அம்மை அருள்சுரந்தாள்; குழந்தையின் வாயில் கவி மலர்ந்தது.

அம்மா பரதேவி தயாபரியே
சும்மா உலகின் சுமையாக இரேன்
எம்மாத் திரமுன் பணியிங் குளதோ
அம்மாத்திரம் வைத்தடி சேர்த்தருளாய்.

இதுவே அப்பாடல். ஐந்துவயதுக் குழந்தை தன் மழலை மொழிகளால் இறைவியை அம்மா என அழைக்கிறது. பெற்றவளும் அம்மா, இறைவியும் அம்மா. அடுத்த வார்த்தையில் குழந்தையின் உணர்வில் ஓர் உயர்ந்த எண்ணம் எழும்புகிறது. பரதேவி என்கிறது. அம்மா என்னும் சொல்லில் அன்பு அரும்புகிறது. பரதேவி எனும்போது தாயினும் பரிவுடைய தன்மை மலர்கிறது. தயாபரி எனும்போது அருளின் மலர்ச்சி பூரணமாகிறது. முதல் அடியிலேயே அன்பு அரும்பி மலர்ந்து அருள் பழுத்துக் கனிகிறது.



அருட் கனியிடம் குழந்தை என்ன வேண்டுகிறது. பணம் வேண்டுகிறதா? பட்டம் வேண்டுகிறதா? பதவி வேண்டுகிறதா? இல்லை; தொண்டுவேண்டுகிறது.

“சும்மா உலகின் சுமையாக இரேன்”

பூமிதேவி சிலரைத் தாங்குகிறாள்; சிலரைச் சுமக்கிறாள். பிறப்பின் பயனை உணர்ந்தவர்களைத் தாங்கிறாள். உணராதாரைச்சுமக்கிறாள். அப்படிப் பூதேவிக்குச் சுமையாகமாட்டேன் என்கிறது குழந்தை.

தொண்டு செய்ய எத்தனையோபேர் வெளிப்படுகிறார்கள். ஆனால் எல்லோரும் தொண்டர்களாவதில்லை. காரணம் நான் என்பது ஒருபுறம் புகழ் என்பது இன்னொருபுறம் இடம்பெற்று விடுகிறது. இவற்றுக்கிடையே தொண்டு அகப்பட்டு அல்லற்படுகிறது. உயிர் அல்லற்படும்போது உடம்பு தனித்து வாழமுடியுமா? இந்த ஞானமெல்லாம் குழந்தைக்குமனக்கண்முன் உருவாகிறது

:‘எம்மாத்திரமுன் பணியிங் குளதோ
அம்மாத்திரம் வைத்தடி சேர்ந்தருளாய்’’

நான் தொண்டுசெய்கிறேன் என்று தம்பட்டம் அடிக்கவில்லை. உன் பணியை, உன்னருளால் செய்வதற்கு என்னைக்கருவியாக்கு என்கிறது குழந்தை.

“அவன் அருளாலே அவன்தாள் வணங்கி” என்ற மணிவாசகரின் மெய்ப்பொருளை உணர்ந்து அநுபவத்தில் வெளியிடுகிறது. இது குழந்தையா? ஆம் அன்னை பராசக்தியின் அருட்குழந்தை. இது ஆத்மீக நிலையில் உலகநிலைக்கு இறங்குவோம் அருட்கவி என இன்று உலகம் கொண்டாடுகிறது.

---

ராகம்-கனடா] பல்லவி [தாளம்-ஆதி

அருளானந்த அன்னை — அரவிந்தநாதர்
அகிலத்தை மறந்தார் — அமரவாழ்வடைந்தார் (அரு)

அநுபல்லவி

புதுவையெனும் நகரில் — புதுமையாய் வாழ்ந்தார்
புனிதமடையும்படி — புகட்டியே மறைந்தார் (அரு)

சரணம்.

காராக்கிரகத்தில் - கண்ணனைக்கண்டார்
கவலையுற்றுந்துறந்து - கதிபெறநின்றார்
சித்தந்தெளிந்துநின்று — சித்தியெல்லாம்பெற்றார்
சீவர்கள் எல்லாம் — சீர்பெறநின்றார். (அரு)

— சீ. சின்னத்துரை.

# மதப்பற்றின் அவசியம்.

....——....

[தென்னாபிரிக்கா டர்பன் திரு. ச. மு. பிள்ளை அவர்கள்]

"இன்று பிரபஞ்சத்திலே இயற்கைச் சாஸ்திர ஆராய்ச்சி விநாடிக்கு விநாடி, விருத்திபடைந்து வருகிறது, புதிய புதிய அதிசயங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஆனால், ஜனங்களுக்கு தருமத்திலும், நீதிநெறியிலும், ஆன்மீக விஜயங்களிலும் பக்தி குறைந்துகொண்டே இருக்கிறது" என்று டாக்டர் ஆட்லர் என்னும் பிரமுகர் அபிப்பிராயப்படுகிறார். அவர் பின்னும் அமெரிக்காவில் ஓர் பத்திரிகை நிருபரிடம் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

கடிகாரத்தின் ஊசலி (பெண்டுலம்) ஒரு கோடிக்குச் சென்றுவிட்டது. இனி வந்தவழியே திரும்பித்தானாகவேண்டும். அதுபோலவே லோகாயததத்துவம் ஆடிப்பாடி அதனுடைய உச்சஸ்தானத்தை அடைந்தாகிவிட்டது. இனி அதனுடைய வேகம் குறையத்தான் வேண்டும். இந்த விஷயத்தை இயற்கைச் சாஸ்திர நிபுணர்களே ஒப்புக்கொள்ளுகின்றனர். அவர்கள் ஒப்புக்கொள்வதற்குக் காரணமென்னவெனில் அவர்கள் இயற்கையை விண்டு துருவி அதனுள்ளே இருக்கும் இரகசியங்களைப்பார்க்கும்போது மனக்கண்ணுக்கு எட்டாதஅதிசயங்களைக் காண்கின்றனர். அப்பேர்ப்பட்ட அதிசயங்களைப்பார்க்கும்போது அவர்களுடையமனம், சிந்தனையில் ஆழ்ந்து மெள்ளமெள்ள பகவான் இருக்கிறானென்றும்; அவர்தான் இந்தஉலகத்தின் சிருஷ்டிகர்த்தா என்னும் பழைய ஞானத்தில் ஈடுபடுகிறது.

என்றைக்கு ஆன்மீகமதத்தை உலகத்தில்பெரும்பாலான ஜனங்கள் அனுதரவு செய்ய மறுப்பட்டார்களோ, அன்று முதல் உலகத்தில் தனிமனிதனுக்கும், சமூகத்திற்கும், நீதிமார்க்க சக்தி குறையத் தலைப்பட்டுவிட்டது. இன்று உலகத்தில் மானிடர்கள் என்ன நினைக்கின்றனர்? 'சர்க்காரால் செய்யப்பட்ட சட்டவரம்பு மீறாமலிருந்தால் போதும்' அதுதான் தருமம். அதுதான் சத்தியம் அதுதான்சன்மார்க்கம்: என்று எண்ணுகிறார்கள். சர்க்கார் சட்டங்களுக்கும். மேல் இருக்கும் சிருஷ்டி கர்த்தாவின் சட்டங்களுக்குண்டென்பதை அவர்கள் மறந்திருக்கிறார்கள்.



மானிடர்களுக்கு முதலில் பகவானிடம் பக்தி ஒழிந்தது அதன்பின் மானிடர்களையே தெய்வமாகக்கொண்டாடத் தொடங்கினார்கள். அந்த பக்தியும் வெகுகாலம்நிலைத்திருக்கவில்லை. அகம்பாவம் அதிகமாயிற்று. ஒவ்வொருவரும் தன்னைத்தானேபூஜித்துக்கொள்ளத் தொடங்கினார்கள். இவ்விதமாக ஜனங்கள் சறுக்கிச்சறுக்கி சந்தேகமென்னும் கடலில் வீழ்ந்து தத்தளிக்கின்றனர். அந்தக்கடலினின்றும் எதைப்பிடித்துக்கொண்டு கரை ஏறுவது? அவர்கள் பிரதானமென்று நம்பியிருந்தவைகளெல்லாம் இன்று அக்கடலில் மிதக்கும்துரும்புகளெனத்தென்படுகின்றன.

தற்காலத்தை இயற்கை அபிவிருத்திசகாப்தமென்றுசொல்லலாம். இயற்கைச்சாஸ்திரங்களைக் கொண்டு புதிய புதிய அதிசயங்கள் கண்டுபிடிக்க, ஜனங்களுக்கு மதப்பற்று குறைந்துகொண்டேவருகிறது. இயற்கை சாஸ்திரிகள் ஒருபுதிய விஷயத்தைக்கண்டுபிடித்தால்; அதைஜனங்கள் மதத்தை எதிர்ப்பதற்கே பிரயோஜனப்படுத்துகிறார்கள்.

இன்று இந்த உலகமானது பொருள் சாஸ்திரத்தில் மேதாவித்தனமடைந்திருக்கிறது. இன்னும் மேலும் மேலும் அடைந்துகொண்டே இருக்கிறது. யந்திரசாஸ்திரங்களிலும்அமோகமாக விருத்தியடைந்துகொண்டிருக்கிறது வியாபாரத் துறையிலும், தொழில்துறையிலும்புதியதத்துவங்களும், நவீனசிருஷ்டியும்ஏற்பட்டிருக்கின்றன. இவ்வளவு அபிவிருத்தி ஏற்பட்டிருந்தும், உலகத்தில் வியாபாரமந்தம் தொலையவில்லை, ஜனங்களின் கஷ்டங்களும் தீர்ந்தபாடில்லை.

உதாரணமாக, ஐரோப்பா கண்டத்தை நோக்குங்கள் அந்த கண்டத்திலே அநேக தேசங்களில் ஜனநாயகம் மறைந்துபோய்விட்டது. ஜனநாயகத்திற்குபதிலாக சர்வாதிகாரம் தாண்டவமாடுகின்றது. அந்தசர்வாதிகாரிகள் மூர்க்கத் தனங்களில் ஒன்று மதங்களை மூச்சுத்திணறச்செய்து கொல்லுவதுதான். தாங்களே கடவுளாக விளங்கவேண்டு மென்பவர்கள், பரலோகத்திலிருக்கும் கடவுளை வணங்கச்சொல்லும் மதத்தைக்கண்டு சகிக்கமாட்டார்களல்லவா?

ஆகையினால், எந்த தேசமாயினும் சரி, எவ்வளவுகாலம்மதத்திற்கு ஆபத்தில்லாமலிருக்கிறதோ; அவ்வளவுகாலம் அந்ததேசத்தில் ஜனநாயகத்திற்கும் ஆபத்து ஏற்படாது.

———

# நம் தாய் நாடு.

(பிரமசாரி சோமசுந்தரம்)

நமது இந்தியா ஒரு பெரிய தேசம் இந்தியாவில் நாடுகள் எத்தனை, நகரங்கள் எத்தனை, பாஷைகள் எத்தனை, நாற்பது கோடி மக்களைத் தாங்கும் தேசம். இதை வர்ணிக்க யார் வல்லார்? பெரிது பெரிது பாரினிற் பெரிது. இப்பூமண்டலத்தில் எந்தத்தேசமேனும் புண்ணிய பூமி என்னும் பெயருக்குரிமையுடையதானால் அது நமது இந்தியாதான். பாரினிற் சிறந்ததேசம். மனித வாழ்விற்கு இன்றியமையாத அறிவு, கடவுளன்பு, தவம், யோகம் அனைத்திற்கும் உறைவிடமாயிருக்கிறது. இந்தியா என்னும் நினைவுதோன்றுங்கால் மிக்க களிப்பும், உள்ளத்தில் புத்துணர்ச்சியும் பிறக்கிறது.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே"

என்று பாரதியார் தமிழகத்துக்கு ஒரு தனிச் சிறப்பைக் கொடுத்ததைக்காண்க. இந்நாட்டின் தொன்மையென்ன? வளமையென்ன? ஞானமென்ன?

தொன்மை சிறந்த இந்நாட்டில் இறைவனருளும், இயற்கை இன்பமும் என்றும் நிலவிக்கொண்டிருக்கிறது. புது மணம் வீசுகிறது நீர்வளம், நிலவளம், மலைவளம், குடிவளம், ஆகியநால்வகை வளங்களும் திகழ்ந்து விளங்குகின்றன. குன்றாத நீர்நிலைகளும், குறையாத நதிகளும் எங்கணும் பரந்து கிடக்கின்றன மலைகளின் ஒழுங்கும், வனங்களின் வரிசைகளும், வரையினின்றும் இழிந்துமத்தளஓசையேபோல்ஒலிக்கின்ற அருவிகளின் வீழ்ச்சிப் பெருக்கும், அருவிகள், நதிகளாய்ப் பாய்ந்து வளஞ்செய்யும் வயல்களின் செழிப்பும் இயற்கை அன்னையைச் சிறப்பிக்கின்றன. வளங்களில் நிறைந்தநாடு, வண்மையில் மிகுந்தநாடு.

இதோ தோன்றிநிற்கும் இமயவரையைப்பார். எவ்வளவு பெருமையும், அழகும் உடையது. மனிதனையறியாமலே, அருளென்னும் சுடர் எழுந்து, அன்பெனும் அருவி பாய்கிறது.



இதைப்படைத்த கடவுள்மீது எவ்வளவு அன்புயாம் செலுத்த வேண்டும், எவ்வளவு பாராட்டவேண்டும். எல்லா அழகிற்கும் உற்பத்திஸ்தலம் அவரே.

"மலைகளிலே உயர்மலையை மகிழ்ந்தணியு நாடு
மாநதியுள் வானதியே மல்கு திருநாடு"

இயற்கை அன்னையின் சீர்சிறப்பை எழுத்தினால் விளக்கிய வாறு இயற்கை அன்னையானவள் எவர்கண்ணையும் கவனத்தையும் கவர்ந்து இன்பமளிக்கிறாள். உடல் நலத்திற்கும் உயிர் நலத்திற்கும் உறுதுணையாயிருந்து, அறிவோர்க்கும், ஞானிகட்கும் உள் உணர்ச்சியைக் கொடுக்கிறாள். இவ்வியற்கை வளங்கள் மக்கள் வாழ்விற்குத் துணைபுரியவேண்டுமென்னும் நன் நோக்கத்தோடு இறைவனால் படைக்கப்பட்டன. ராமகிருஷ்ணபரமஹம்சர் இயற்கைத் தோற்றத்தைக் கண்டால் அப்படியே ஸ்தம்பித்து அதைப் பார்த்துக்கொண்டே நின்றுவிடுவார். ஒருநாள் வானத்தை நோக்கும்பொழுது, கார்கால இருண்டமேகம் சூழ்ந்து படிந்திருப்பதைப்பார்த்தார். அவ்வமயம் வெண்ணிறமுள்ள கொக்குக் கூட்டங்கள் வரிசையாகச் செல்வதைக் கண்டார்; ஈசன் சிருஷ்டியை நினைத்தார்; செயலைக் கண்டார்; மெய்மறந்தார். இயற்கை மாட்சியும், இறைவன் பற்றிய பேச்சும், ராமகிருஷ்ண தேவரை மொழிக்கெட்டா நிலைக்கு அழைத்து செல்லும். ஞானிகள் பழகும் யோகநிலைக்கும் இது மேலானது

இமயத்தை முடியாகக்கொண்டு, சிந்து, கங்கை, நருமதை முதலிய நதிகளை ஆரமாயணிந்து பொலிந்துவிளங்கும்காமதேனுவாம் நம் பாரததேவி காவேரி, கோதாவரிபோன்ற நதிகள்இருந்தமையால்பயிர்த்தொழிலாகியபழுதற்றகமத்தொழிலும் பெரிதும் மேம்பாடடைந்திருக்கிறது. இதனா பசியும், பிணியும், பகையும், நீங்கிமக்கள்அன்பும் அருளும் நிறைந்து செழித்துக் களித்துச் சிறப்புற்றிருந்தனர். இதனால் எங்கும்இன்பவாழ்வு கமத்தொழில் மட்டுமல்ல, கைத்தொழிலிலும் வாணிகத்திலும்சிறந்தோங்கியது தமிழகம்.

இந்நாட்டின் தொன்மையையும் தன்மையையும் எக்கால அளவுகொண்டு கூறுவது. சரித்திர காலத்தையுங்கடந்து நிற்பது

இத்தொன்மை வாய்ந்த தாய்வயிற்றிற்பிறந்தவர் யாமல்லவா, தமிழ்நாட்டின் வளனும்தொழின்முறைகளும், இந்நாட்டார் பண்டைநாளில் பிறநாடுகளோடு செய்துவந்த வாணிபப் பெருக்கையும் சங்கநூல்விபரமாகக்கூறும். எந்நாட்டினரும் தன்னாட்டிற்கு வேண்டிய பொருள்களை எல்லாம் தென்னாட்டினின்றுங் கொள்வாராயினர். பண்டைத்தமிழ் நாடுகிறிஸ்துபிறப்பதற்குப் பன்னூறாண்டுகளுக்கு முன்னரே பாபிலோன், எகிப்து, ரோம், கிரீஸ், சீரியா, முதலிய நாடுகளோடு வாணிகஞ் செய்ததைப்பன்னூல்கள் வாயிலாக அறியலாம். அந்நாடுகளுக்குத் தேக்கு, சந்தனம், தந்தம், தோகை, மிளகு முதலியன தமிழ்நாட்டினின்றும் அனுப்பப்பட்டன என்பதற்குப்பலஅகச்சான்றுகளுண்டு. ரோமாபுரிக்குபட்டாடைகளும் எகிப்துக்கு மஸ்லின்கலையும் உதவிவந்தது இந்தியா. பொதுவாக உலகத்திற்கே உடையை வளங்கிவந்தது நம் தேசம்.

நம் தாயானவள் கல்வியறிவிற்சிறந்தவளாய் உரிமை உணர்வு உடையவளாயிருந்தாள். அந்நாளில் வளர்ந்த கலைஞானத்திற்கோர் அளவில்லை. நம் மூதோர் இயல் இசை நாடகம் என்னும் முத்துறைகளிலும் வல்லுனர் என யாம் அன்னார்தமிழ்க்கல்வித்திறனையுணர, சங்கநூல்களும், மதசம்பந்தமுள்ள கம்பராமாயணம், பெரியபுராணம், தேவாரதிருவாசகம் நாலாயிரப்பிரபந்தம் முதலியசில நூல்களும் விளக்கி நிற்கின்றன.

பழய சரித்திரங்களைஇசைவழியால் தெரிவித்தால் நலமெனக்கருதித்தமிழ்ப்புலவர்களில் பலர் பலநூல்களைக் கீர்த்தனமயமாகச் செய்து வெளிப்படுத்தி இசைவளத்தைப் பெருக்கியதன்றி அதன்மூலமாகப்பக்தியையும் சமாதானத்தையும் ஒற்றுமையையும் உணர்த்திமக்கள் வாழ்வை மகிழ்வித்துப் புகழ்பெற்றிருந்தனர்.

வாய்ப்பாட்டிலும், யாழ் முதலியவாத்தியங்களிலும், கூத்து முதலியவற்றிலும் தேர்ச்சிபெற்றிருந்தனர். நம் முன்னோர், யாழின்வகை, குற்றங்கள் குணங்கள்முதலியவற்றைச் சிலப்பதிகாரம் பெருங்கதை சிந்தாமணி முதலிய ஆரிய நூல்களில் முறையே காண்க. மதம்பிடித்து, மாநகரைக் கலங்கும்படி செய்த யானையொன்றை உதயணன் யாழ்வாசித்து அடக்கித் தன்னேவல் செய்யும்படி செய்து யாவர்க்கும் விம்மிதத்தை உண்டாக்கினன் என்று மிகவும் அழகாக ஒரு வரலாறுண்டு. (தொடரும்)



# பகவத் சாக்ஷாத்காரமும் பகவத் கிருபையும்.

பகவத் சாக்ஷாத்காரம் எதைப்போன்றது தெரியுமா? அது குழந்தையின் கையில் உள்ளதோர் இனிப்புப்பண்டத்தைப் போன்றது. அப்பண்டத்தைத் தந்துவிடுமாறு சிலர் குழந்தையை வேண்டினால் குழந்தை அதை அவர்களிடம் கொடுத்துவிட உடன்படுவதில்லை. ஆனாலும் தனக்குப்பிரியமான இன்னொருவரிடம் அது அப்பண்டத்தைச்சுலபமாகக் கொடுத்துவிடுகிறது. பகவானைத்தரிசிக்கும்பொருட்டு தன் வாழ்வுமுழுவதும் ஒரு மனிதன் கொடுந்தவம் புரிகிறான். ஆனால் அவனுக்குவெற்றிகிட்டுவதில்லை இன்னொருவனோ முயற்சியேதுமின்றியே சாக்ஷாத்காரம்பெறுகின்றான். அது பகவத்கிருபையைப்பொறுத்தது தமக்கு இஷ்டமானயாருக்கும்பகவான் தமது கிருபையை அளிக்கிறார். கிருபையொன்றே முக்கியமான விஷயமாகும்.

# பகவான் நாமம் மரணபயத்தை போக்குகிறது.

கிருஷ்ணனுடைய பக்தையான பிருந்தை கிருஷ்ணனிடம் உம்மைக்கருணாமூர்த்தியென்று யாரே கூறுவர்! இராமாவதாரத்தில் நீர் சீதையை வாழ்வு முழுவதிலும் உமக்காக அழுமாறு செய்தீர் இந்தக்கிருஷ்ணாவதாரத்தில் இராதை உம்பொருட்டு அழுதுகொண்டிருக்கிறாள். கம்சனுடைய காராக்கிருகத்தில் உமது தாய்தந்தையார் பெருந்துயர் அனுபவித்து உமது பெயரைக்கூறி இரவும்பகலும் அழுதனர். அங்ஙனமாயின் நான் உமது நாமத்தை உச்சரிப்பதேன் தெரியுமா? மரணபயம் அனைத்தையும் உமது பெயர் அகற்றிவிடுவதால்தான் என்று கூறினாள்.

—சாரதாதேவி.

# குருமணிமாலை.

ஊனாகியென் னுளமாகியுள் ளுணர்வாகிய ஒருவன்,
நானார் என ஆராயுழி, நானாகிய முதல்வன்
மோனானந்தப் பெருவெள்ளத்தில் மூழ்கித்திளை முனிவன்.
தேனார் பொழில் அண்ணாமலை திகழும் குருபரமன்,

கண்டார்மனக் கவலைச் சுமை கனவிற்படும் இலவாம்,
தொண்டர் தவச் சித்தர்குழு தொழுதேத்திடுஞ் சுடரோன்
வண்டார் வனமலர் கொஞ்சிடுந் தென்றல் வளர்மலையான்,
வெண்டாமரை பொருபுன்னகை விலகாதென துளமே!

உருகுந் திருவடியார் தமிழ் உரையாமொழி பரவப்
பெருகாதலொ டருகான்மறை பேசித் தவழ்ந் திறைஞ்சும்
அருவித்திரள் அருகோடிடக் குருவித் திரள்பாடும்,
திருவார் நகர் அண்ணாமலை தீர்த்தன் அடிசரணே!

வேறு

எதிலேயெல்லாமுதித்ததுவோ, எதிலேயெல்லாமுறைவதுவோ
எதிலேயெல்லாம் அடங்கிடுமோ அதுவேஉயிருக்குயிராமோ
அதிலேமனதைக்கரைத்ததுவே அகிலவுலகம்என் றறிந்தால்
பதியேயில்லை, முதியதில்லை, புறமும்உள்ளும்பூரணமே!

தன்னையகலாதிருப்பதுவே தலையாங்கருமமுலகினிலே,
தன்னையறியும்அருளறிவே தலையாமறிவாமுலகினிலே.
தன்னையன்றிவேறெண்ணாத்தவமேதுறவாமுலகினிலே
பின்னையென்னபெற்றாலும் பெற்றதொன்றும் இலையாம்!

இருக்குமிடத்திலிருந்துவிட்டால்இரண்டுமில்லைமூன்றுமிலை
தருக்கவாதத்தொல்லையிலை, சாத்திரத்தின்சண்டையிலை,
பெருக்கப்பேசுஞ்சாதனத்தின்பெயருமில்லைஅகங்கார
வருக்கமில்லைதனையறிந்தவாய்மையொன்றேவாழ்வாமே!

பகவான் ரமணரின் ஜயந்திவிழா 26-12-50ஆகும். இந்த ஆறுபாடல்களும் பாரதசக்திமகாகாவியத்திலுள்ள அருணஜோதிப்படலத்திலிருந்து எடுக்கப்பட்டன.



# சாரதா பூஜை.

கண்டவரென்பெற்றதாயும்கடிமணஞ்செய்தாற்பிள்ளை
கொண்டவேதாந்தப்பித்தம்குறைந்திடும்என்றுசேர்ந்தே
பெண்டிரைவைத்திருக்கும்பெற்றவர்தம்மைக்கேட்டாள்
"ஒண்டொடி இவளே"யென்றுகாட்டினன் உரியமைந்தன்.

"சீரமர்ஜயராம்பட்டிதன்னிலேசெழித்தநல்லாள்,
காரமர்கருணைச்செல்வி, கருவிலேதிருவைக்கண்ட
சாரதாதேவியென்னுந்தளிரிளம்பாவையேயென்
தார"மென்றுரைத்தான்; அந்தத்தையலே அடைந்தாளம்மா!

திருமணமானபின்பே திரும்பியபரமஹம்ஸன்
ஒருமணவுறுதிகாட்டி யோகத்திலீடுபட்டான்
அருகிருந்ததனைக்கண்டான் ஆயிரமடங்காயினும்
பெருகியதந்தோஞானப்பித்தெனச்சிரித்தார்மாதோ!

ஆய்வுறுமதங்களெல்லாம் அறிந்தபின்மனைவிதானுந்
தாயெனக்கண்டான்; அன்னைசாரதாதேவிகாளி
கோயிலுக்குற்று, நாதன் யோகத்திற்குலவித்தானும்
தூயவளாகி அன்புத் தொண்டுகள் செய்து வந்தாள்.

பெற்றதன் பெண்ணுக் கோர்தாய் பிரியமாய் அனுபவங்கள்
கற்றளித் திடுவதேபோல், கடவுளுங் கல்வியெல்லாம்
பற்றறப் புகட்டி நாதன் பக்குவப்படுத்திச் சக்தி
உற்றெழச் செய்து, தேவிநீயென உபாசித்தானே!

"மாதரில் அன்னை கண்டு. வணங்கிடுந் தூயநேயா!
கோதறுத் தென்னையாண்டு கொண்டனை; குருவுந் தாயும்
நாதனும் உலகும் செல்வ நலங்களும் நீயே; உன்றன்
பாதமே மோட்சம்" என்றாள் பத்தினித் தெய்வமாங்கே.

[ஸ்ரீ சாரதாமணி தேவியார் ஜென்மவிழா 31-12-50 அவரது ஜயந்தித்தொடர்பில், பாரத சக்தி மகாகாவியத்தின் இராமகிருஷ்ண படலத்திலிருந்து இப்பாடல்களை வெளியிடுகின்றோம்)

# அஞ்சலித்திடுவோம்.

(சுத்தானந்த சமாஜம்....மட்டக்களப்பு.)

அஞ்சலித்திடுவோம் — பகவான்
அரவிந்தப்பதத்தை;
செஞ்சொல் மலர்களால் — அன்புத்
தேன் பெருகிடவே! 1

புல்லுடல்விட்டுச் .... சாகாப்
பொன்னுடல்பெற்ற மகா
வல்லவன்நாமம் —நெஞ்சில்
வழுத்திப் போற்றுவோம்! 2

வையகமெல்லாம் — இன்ப
வாழ்க்கை பெற்றிடவே
தெய்வ ஜீவனம் — தந்த
திவ்ய யோகியாம்! 3

புதுயுகக்காலை — எழுந்த
கதிர் மணிச்சுடர்
அதிமனிதர் கலைத் — தந்த
மதுரக் கற்பகம்! 4

வங்கப் பொய்கையில் — மலர்ந்த
தங்கத் தாமரை!
பொங்கும் கலையெல்லாம் .... நிறைந்த
மங்கலத்திங்கள்! 5

பாரத சக்தி .... பெற்ற
பூரண யோகி!
வீரர் போற்றிடும் .... ஆத்ம
தீர விவேகி! 6

மோனக் குகையிலே — ஒளிரும்
ஞானக் கனலிவன்
தியான வெளியிலே .... இசைக்கும்
கானக் குழலிவன்) 7

அன்னை பதத்திலே .... தன்னை
அர்ப்பணிப்பதே
எண்ணில் தவத்திலே .... முதற்படி
என்னக் காட்டினன்!

ஆத்ம விஞ்ஞானி ... விண்
ணரசியல் ஞானி
சாத்விகஞானி .... அன்புச்
சமரசஞானி! 9



# கரும்புதின்னக் கைக்கூலி!

---

"கண்ணே, இங்கே வாடா! ஒரே ஒரு கவளம்; இதைமட்டும் வாயில் வாங்கிக் கொள்ளு. என்னப்பா அல்லவா! உனக்கு நிறைய பொம்மை வாங்கித்தருகிறேன்! இந்த, ஒரே ஒரு உருண்டை ஓடிவா, கண்ணே." என்று கெஞ்சுகிறாள் குழந்தையிடம் ஒரு தாய். பிள்ளையின் பசிநேரம் பெற்றவளுக்குத்தான் தெரியும். பிள்ளைக்குப் பசிகூடத் தெரியாது! பசியின் துன்பம் உண்டானாலும் சாப்பிட்டாலதான் தீருமென்பதும் தெரியாத பச்சிளங் குறும்புக் குழந்தைகளும் உண்டு. பிள்ளைக்குத் துள்ளி விளையாடுவதிலேதான் கண். இளங்கன்று பயமறியாதல்லவா? பயமறியாததால் அபாயம உண்டாகாதென்று சொல்லமுடியாது. விளையாட்டு மிஞ்சிப்போய் உடல்நலங் கெட்டாலோ, தேகத்தில் ஏதாவது காயமுண்டானாலோ இளங்கன்றுக்கு வலியில்லாமலிருக்குமா? அழாமலும் இருக்கமாட்டான்! ஆனால் ஆபத்தைத் தடுப்பதும் பசியைத்துடைப்பதும் அன்னைக்குத்தான் பொறுப்பு.

பிள்ளையின் போக்கைத் திருப்பிப் பசியைத் தீர்க்கப் பார்க்கிறாள் தாய். அதற்காக அவனுக்கு வெகுமதிகூடத் தருவதாகக் கூறுகிறாள். ஏன்? குழந்தைக்கு அதிலேதானே விருப்பு. அதைக் கொடுப்பதனால்தான் வருவான்; சாப்பிடுவான்; பசி தீர்வான். எத்தனை கவலைபுடையவர் தாய்! இப்பேர்ப்பட்ட கவலையைத் தன் பக்தனிடம உடையவர் கடவுள். சாதாரண பனித புத்தி இப்படிச் சொல்லும. ஆனால் தெளிந்த உண்மை "இதைப்போல் கோடிமடங்கினும் மேமபட்ட ஈசனின் பெருங்கருணை" என்றனர்.

உலக வாழ்வில் சுகமாயிருக்க மனிதன் பல வழிகளிலும் உழைக்கிறான். மாடு கன்று, வீடு நிலம், மனைவி மக்கள், உண்டி உடை, பட்டம் பதவி, பணம நகை, கல்வி புகழ், பணியாள் வாகனம் என்று எண்ணிய திட்டத்தில் ஈடுபடுகிறான். இவன் கூத்தை இறைவன் கண்டு இரக்கப்படுகிறான்! இவன் சுகப்பசிக்கு அருள் புதாட்டத் திருவுளங் கொள்கிறான். ஆனல் அந்தோ, இவனையார் அருளன்ன அழைப்பது? எப்படி அழைப்

பது? இதற்காக இறைவன் மதங்களாகிய தன் மணிமலர் வாயினால் மனிதனை அன்போடு தன்னிடம் அழைக்கிறான். குறும்புக் குழந்தையைக் குட்டி ஊட்டமுடியுமா? அழுகையும் அடமும்தான் மிஞ்சும், "அடே நீ களைத்திருக்கிறாய். விளையாடாதே சாப்பிட்டு ஓய்வெடுத்துக்கொள். அதுதான் நல்லது." என்று ஞாயம்பேசினால் நடக்குமா? அதுபோலவே குழந்தைபோன்ற நன்று, தீதறியாத வேண்டியது வேண்டாததறியாத, ஆனால் சுகப்பசிமட்டும் மிகுந்த மனிதனைக் கண்டித்து கடவுள் வழி திருப்பவும் முடியாது. "உலகம் துக்கம்; உலகம் பொய்; முக்தி சுகம்; கடவுள் மெய்" என்று கடைந்தெடுத்த ஞானத்தைப் போதித்தாலும் நடக்காது. பின் என்ன செய்யலாம்? அது இறைவனுக்குத் தெரியும்.

தாய் என்ன பண்ணினாள்? குழந்தை எந்த விளையாட்டை நோக்கி ஆவலுடன் ஓடுகிறானோ அதற்குத் தேவையான பொம்மைகளைத் தருகிறேன் என்று உறுதி கூறி அழைக்கிறாள். சட்டென்று பிள்ளையின் மனது மாறுகிறது. கால் ஓடாமல் நிற்கிறான். :'நிஜந்தானம்மா? வாங்கித்தாரியா? ஊம்; சரி; அப்படின்னாவர்ரேன்" என்று ஓடிவந்து உணவை ஊட்டிக்கொள்கிறான். ஆனால் அவன் உடல் நாள் முழுவதும் ஓடி ஆடிக் களைத்திருப்பதால் உண்டபின் உறக்கம் வந்துவிடுகிறது. தாய்மடியிலேயே தூங்கிப்போகிறான்! தூக்கத்தால் சோர்வு, களைப்பு எல்லாம் நீங்கிச் சுகமடைகிறான். இவ்வண்ணம் இறைவன் என்ன செய்கிறான்? மதங்களாகிய அவன் மணிவாய் என்ன் அன்பு மொழி பேசுகிறது,

"மனிதனே, சர்வசக்திவாய்ந்தவன் கடவுளே. அவன் உனக்கு சகல செல்வங்களையும் அளிப்பான், அவன் நாமத்தைச் சொல்லி அவனைப் பூஜித்தால் உனக்கு நல்ல பட்டம் பதவிகள் கிடைக்கும். அவனை ஸ்மரித்தால் வீடு வாசல் நிலம், பொன் இவைகளுக்கு ஒரு குறைவும் இராது. தரித்திரம் தலைகாட்டாது. அவனை முறைப்படி வணங்கு, நல்ல வரன் கிடைக்கும்; அன்பும் அழகும் கொண்ட மனைவி வருவாள். நல்ல புத்திர பாக்கியம் உண்டாகும்." என்று மனிதன் எதைநாடிக் கடவுளை விட்டுவிடுகிறானோ அதையே திரும்படக் கடவுளிடம் பெறமுடியுமென்று உறுதி கூறுகின்றன. பாமரன் ஒருவனுக்கு முக்தி, ஞானம்



தேவையில்லாமலிருக்கலாம்; ஆனால் தன் ஆவல் பொருள்களை அடையலாமென்றால் அவன் ஆண்டவனை வழிபட ஆரம்பிக்கிறான், அவனது தேவைகளைத் தெய்வவழிபாட்டால் எய்தப்பெறுகிறான். ஆனால் ஆசை அதோடு நில்லாமல் மேலும் மேலும் கோட்டை கட்டுகிறது. தன் மனோரதம் முடிய மறுபடியும் அதிகசிரத்தையுடன் தெய்வவழிபாடு செய்கிறான். இவ்வாறு தன் இச்சைகளுக்காக இறைவனை வேண்டி வேண்டி அவனைமனிதன் தனக்கு வேண்டியவனாக்கிக்கொள்ளுகிறான்.

இத்தகைய பக்தி கொண்ட மனத்தில் ஆண்டவனின் அருட்கரங்கள் ஞான அன்னத்தை ஒவ்வொரு பருக்கையாக ஊட்டி வைக்கின்றன. அதனால் நாளடைவில் பக்தன் தன் புறநோக்கம் வீணென உணருகிறான். தன் உயிரனைய உத்தமனின் சினேகத்தையே விரும்புகிறான். அந்த உயர்ந்த நிஷ்காம்யபக்தி அவனை ஆண்டவனிற் கரைத்து பரமானந்தத்தயிலில் பேரின்பத்தில் அழுத்திவிடுகிறது. அவன் சுகம் சம்பூரணமாகிறது.

உயிர்களின் சுகத்தைப்பற்றிய கவலை பரமனுக்கிருப்பது போல் உயிர்களுக்கே அவ்வளவு இல்லை. மக்கள் மடைமைத் துயர்நீங்கி அறிவின்பம்பெற ஆண்டவன் அதிகருணைகொண்டவனாகிறான். அஞ்ஞானத்துழலும் மனத்தை மெள்ள மெள்ளத் தன்பால் சுவைகாட்டியழைத்து அருள்ஞானத் திருவமுதம் ஊட்டுகிறான். யார் அறிவார் அவன் திருவுளத்தை! அனுபவித்தோரே அறிவர்.

[இக்கட்டுரை அருள் என்றமாதவெளியீட்டிலிருந்து எடுக்கப்பெற்றது]

## முக்கிய கவனிப்பு.

சுவாமி சுத்தானந்த பாரதியாரின் இலங்கை விஜயம் பகவான் அரவிந்தரின்மஹாசமாதியை முன்னிட்டு காலவரையறையின்றி ஒத்திபோடப்பட்டுவிட்டது என்பதை அறியத்தருகிறோம்.

# செய்தித்திரட்டு.

## நாவலர் தினம்.

நாவலர்பாடசாலை, தெல்லிப்பழை பாலர் ஞானோதயசபை தெல்லிப்பழை கிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை, குருநாக்கல் சைவமகாசபை, மாவத்தகம சைவமகாசபை, நாவலப்பிட்டி இந்துவாலிபர் சங்கம், பதுளை சைவபரிபாலன சங்கம் ஆதிய இடங்களில் ஷை தினம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

## சமய தீட்சை

26-11-50ல் குருநாக்கல் சைவமகாசபை ஆதரவில் 56 பேர் சிவதீட்சைபெற்றனர். ஷை தேதியில் நாவலப்பிட்டி இந்து வாலிப சங்க ஆதரவில் 66 பேர் சிவதீட்சை பெற்றனர்.

## திருவெம்பாவை

வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் நிகழும் விகிர்தி வரு மார்கழி மீ 1ந்தி சனிக்கிழமை தொடக்கம் பத்துநாட்களுக்கு (16-12 50 — 5-12.50) திருவெம்பாவை பாடல்களும் பூசையும் நடைபெறும். இவை தினமும் 7—7-30 வரை இலங்கை ரேடியோ நிலையத்தாரால் அஞ்சல செய்யப்பெறும்.

## வெள்ளிவிழா

பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை வெள்ளிவிழா 22-11-50 சனிக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

## சைவபரிபாலன சபை

கெக்கிராவ பிள்ளையார் கோவிலில் அங்குள்ள சைவநன்மக்கள் ஒன்றுசேர்ந்து மேற்படி பெயருடன் சங்கம் ஒன்று ஸ்தாபித்தமை கேட்டு அகமகிழ்கிறோம்.

## பகவான் அரவிந்தரின் மஹாசமாதி

பகவான் அரவிந்தர் 5-12-50 செவ்வாய்க்கிழமை காலை மஹாசமாதியடைந்தார். இத்தினம் கொழும்பு தெய்வீக வாழ்வுச் சங்கத்திலும் நாவலப்பிட்டி இந்து வாலிப சங்கத்திலும் மட்டக்களப்பு சுத்தானந்த சமாஜத்திலும் கொண்டாடப்பட்டது

## ஸ்ரீ ராதாகிருஷ்ண கல்யாண மஹோற்சவம்

பொன்மலை பக்தரஞ்சனிய சபாவில் மேற்படி மஹோற்சவம் 28-12-50—6-1-51 வரை சிறப்பாக நடைபெறும் என மேற்படி சபை பக்தர்கள் அறிவிக்கிறார்கள்.




# ஆத்மஜோதி ஆயுள்சந்தாதாரர்.

திரு T. A. மூர்த்தி P O BOX, 514, கொழும்பு,

---

## அருள்.

இது ஓர் ஆத்மீக மாதவெளியீடு

பகவான் ஸ்ரீ ரமணமகர்ஷிகளின் உபதேசங்களைப் பரப்புதலையே நோக்கமாக உடையது,

வருடச்சந்தா ரூபா. 2.

ஸ்ரீ ஜானகி நிலையம்,

கணபதிநகர், தஞ்சை, தென்னிந்தியா

---

## யோகி ஸ்ரீ சுத்தானந்தபாரதியார்

இயற்றியவை.

| | |
|---|---|
| பைந்தமிழ்ச்சோலை | 0-10 |
| அன்பு வழி | 0-10 |
| பாப்பாபாட்டு | 0-8 |
| காவேரி | 0-8 |
| கஸ்தூரி | 0-8 |
| மனப்பேய் | 0-6 |
| யோகசித்தி (மூலம்) | 0-4 |
| இல்லறவொழுக்கம் | 0-4 |
| அர்ச்சனைமாலை | 0-6 |
| [illegible] | 1-0 |
| பெரியவர் கதை | 1-8 |
| தேசிய கீதம் | 1-8 |
| அரவிந்தப்பிரகாசம் | 2-8 |
| [illegible] | 2-0 |
| திருக்குறள் இன்பம் | 3-8 |
| [illegible] | [illegible]-0 |
| கலைக்கோயில் | 7-8 |

SHUDDHANANDA NILYAM.

PUBLISHERS & BOOK-SELLERS

PUDUKKOTTAI.

Ceylon Sole Agent: M. O. Murugesapillai & Sons, Nawalapitiya.

Registered at the G. P. O. as a News paper.


## இளிச்ச வாயன்.

[லோம்கிரி]

யோகி ஸ்ரீ சுத்தானந்தபாரதியார் தமிழாக்கம்.

பெரும்புலவர் விக்தர் ஹ்யூகோ எழுதிய பிரெஞ்சு மொழியில் ஆயிரம் பக்கங்கள் உள்ள இந்நாவலை இனிய எளிய விறுவிறுப்பான தமிழில் ஆக்கினார் கவியோகி சுத்தானந்தபாரதியார். படியுங்கள்! புதிய உணர்ச்சி பெறுவீர்கள்.

விலை ரூபா 3-8

## ஏழைபடும்பாடு.

(லே மிஸெரபிள்ஸ்)

இந்நூல் பிரெஞ்சு நாவலாசர் விக்தர் ஹ்யூகோ எழுதிய உலகப்புகழ்பெற்ற 'லே மிஸெரபிள்ஸ்' என்னும் நாவலின் தமிழாக்கம்.

விலை ரூபா 5/-

சுத்தானந்த நிலையம்
புதுக்கோட்டை.

## இந்துசாதனம்.

1889-ம் ஞு (விகிர்தி வருட) ஆரம்பமானது.

வாரம் இருமுறை செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் தனித்தனி ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளிவருவது சைவசமயம், தமிழ்மொழி சனசமூகம் முதலியவற்றின் பொருட்டு உழைப்பது.

மனேஜர்: இந்துசாதன ஆலயம்.
யாழ்ப்பாணம் (சிலோன்)


கௌரவ ஆசிரியர் க. இராமச்சந்திரன், பதிப்பாசிரியர் நா. முத்தையா
ஆத்மஜோதி நிலையம் நாவலப்பிட்டி (இலங்கை)
அச்சுப்பதிப்பு சாவனை யந்திரசாலை, 16-12-50.